# எஸ். டபுள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள மொழிச்சட்டம் – பாராளுமன்ற உரைகளை ஆவணப்படுத்தல்

இராசதுரை கீர்த்தனா
அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
rrkeerthana23@gmail.com

*இலங்கையானது பல்லின கலாசாரத்தைக் கொண்ட நாடாகும். இங்கு பல இனத்தவர்கள் வாழ்வதோடு அவர்கள் பல மொழி பேசுபவர்களாகவும், பல வகையான சமய நம்பிக்கை மற்றும் பாரம்பரிய கலாசார மரபுகளை பின்பற்றுபவர்களாகவும் காணப்படுகின்றனர். குறிப்பாக இலங்கையில் வாழும் மக்கள் மொழி ரீதியாக இரு பிரதான இனக் குழுக்களாகவும் வேறுபட்டுள்ளனர். சிங்களவர்கள் சிங்கள மொழியையும், தமிழர்கள் தமிழ் மொழியையும் தாய் மொழியாக கொண்டுள்ளதுடன் முஸ்லீம்களில் பெரும்பான்மையானோர் தமிழ் மொழியைத் தாய்மொழியாகவும் கணிசமான அளவினர் சிங்கள மொழியில் புலமை உடையவர்களாகவும் உள்ளனர். எவ்வாறிருப்பினும், இலங்கையர்களில் பிரதான இரு இனத்தவர்களில் அதிகமானோர் சிங்களம் அல்லது தமிழ் எனும் மொழியில் புலமை பெற்றவர்களாக உள்ளனர். அந்தவகையில் இலங்கையின் சிங்கள-தழிழ் இன முரண்பாடு என்பது சர்வதேச கவனத்தைப் பல வழிகளிலும் கவர்ந்தெடுத்ததோடு இன்றுவரை தீர்க்கப்படாதுள்ள ஒரு முரண்பாடாகவும் காணப்படுகின்றது. அரசியல், சமூக, பொருளாதார மற்றும் வெளிவாரிக் காரணிகள் என பல்வேறு காரணிகள் இலங்கையில் இன முரண்பாடு தோற்றம் பெற்று வளர்ச்சியடைவதற்குப் பங்களிப்புச் செய்திருந்தன. அவற்றுள் பிரதான பங்களிப்பாக சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட அரசகரும மொழிகள் கொள்கை காணப்படுகின்றது. இலங்கையானது சுதந்திரமடைந்த பின்னர் மொழி அரசியல் என்பது எழுச்சி பெறத் தொடங்கியது. இதனால் இலங்கையில் அரசாங்கங்கள் முன்னெடுத்த “சிங்களத்தை மட்டும் முதன்மைப்படுத்திய அரசகரும மொழிக் கொள்கையானது சிங்கள மற்றும் தமிழ் இனக் குழுக்களுக்கு இடையேயான முரண்பாடு தீவிரமாக எழுச்சி பெறுவதற்கு பெரிதும் பங்களிப்புச் செய்திருந்தது. அவற்றுள் முதன்மையானதாக தனிச்சிங்கள மொழிச்சட்டம் காணப்படுகின்றது. தனிச்சிங்கள மொழிச்சட்டம் அல்லது அதிகாரபூர்வமாக **1956** ஆம் ஆண்டின் **33** ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டம் என்பது எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா தலைமையிலான இலங்கை அரசாங்கத்தால் **1956** ஆம் ஆண்டு ஜூலை ஆறாம் திகதி இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட “சிங்களம் மட்டுமே இலங்கையின் அரசகருமமொழி” என்ற சட்டத்தைக் குறிக்கும். இச்சட்டத்திற்கு முன்னர் நாட்டின் நீதிமன்ற, மொழியாகவும், நடைமுறைச் செயல்முறைகளிலும் ஆங்கிலமொழியே உத்தியோக பூர்வமான மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. நாடாளுமன்ற விவாதங்கள் கூட ஆங்கிலமொழியில் நடத்தப்பட்ட போது தமிழ் அல்லது சிங்களத்தில் உரையாற்ற சபாநாயகரின் விசேட அனுமதியைப் பெறவேண்டியிருந்தது. எனவே இவற்றை இல்லாமற் செய்யவும், தனது தேர்தல் நோக்கத்திற்காகவும் பண்டாரநாயக்காவினால் தனிச்சிங்கள*